**அக்டோபர் – 20**

# TNPSC துளிகள்

- மூத்த காங்கிரஸ் தலைவரான சசி தரூர் அவர்கள் "உரிமையுடையவர்களின் போராட்டம்" ('The Battle of Belonging) என்ற ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## நீளமான இரு திசைப்பட்ட சுரங்கப் பாதை – ஆசியா

- ஜம்மு காஷ்மீரில் உள்ள 14.15 கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஜோஜிலா சுரங்கப் பாதையானது ஆசியாவில் நீளமான இரு திசைப்பட்ட சுரங்கப் பாதையாக இருக்கும்.
- இது தேசிய நெடுஞ்சாலை – 1ன் மீது அமைந்து ஸ்ரீநகர் பள்ளத்தாக்கு மற்றும் லேஹ் (லடாக் பீடபூமி) ஆகியவற்றிற்கு இடையே அனைத்து வானிலை சூழ்நிலைகளிலும் ஒரு இணைப்பு வசதியை வழங்க உள்ளது.
- இந்தத் திட்டமானது தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழக நிறுவனத்தினால் செயல்படுத்தப்பட உள்ளது.

## ஸ்டார்ஸ் (STARS) திட்டம்

- மத்திய அமைச்சரவையானது உலக வங்கியினால் ஆதரவளிக்கப்படும் ஸ்டார்ஸ் (STARS - Strengthening Teaching-Learning and Results for States) திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக நேரடி இணைப்புகளுடன் செயல்படுத்துதல், மேம்படுத்துதல், மதிப்பிடுதல் மற்றும் இடையீடுகளை மேம்படுத்துதல் ஆகியவற்றில் மாநிலங்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஸ்டார்ஸ் என்பது "மாநிலங்களுக்கான கற்பித்தலை மேம்படுத்துதல் மற்றும் தேர்வு முடிவுகளை மேம்படுத்துதல்" என்பதைக் குறிக்கின்றது.
- இந்தத் திட்டமானது இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களை உள்ளடக்கவுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## இரண்டாம் உலகப் போர் குண்டு “Tall boy”

- ஒரு மிகப்பெரிய இரண்டாம் உலகப் போர் குண்டானது போலந்து நாட்டின் கடற்படையினால் நடத்தப்பட்ட ஒரு பிரத்தியேகப் பயிற்சியின் போது நீருக்கடியில் வெடித்தது.
- 5 டன் எடை கொண்ட இந்த குண்டு “Tall boy” என்று பெயரிடப்பட்டுள்ளது. இது “நிலநடுக்க குண்டு” என்றும் அறியப்படுகின்றது.
- இது 1945 ஆம் ஆண்டில் நாஜி அணியின் போர்க் கப்பல் மீதான தாக்குதலில் பிரிட்டிஷ் ராயல் விமானப் படையால் வீசப்பட்டது.
- இந்தக் குண்டானது போலந்தின் வடமேற்கில் நாஜி ஜெர்மனியின் முன்னாள் பகுதியான Swinoujscie என்ற இடத்திற்கு மிக அருகில் 2019 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப் பட்டது.




## இரண்டாவது கோவிட் – 19 தடுப்பு மருந்து – ரஷ்யா

- ரஷ்ய அதிகாரிகள் “எபிக்வேக் கொரானா” (EpicVacCorona) எனப்படும் ஒரு புதிய கோவிட்-19 தடுப்பு மருந்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளனர்.
- இது பெப்டைடை அடிப்படையாகக் கொண்ட ஒரு தடுப்பு மருந்தாகும்.
- ஸ்புட்னிக் V என்பது இரஷ்யாவினால் மேம்படுத்தப்பட்ட முதலாவது தடுப்பு மருந்தாகும்.
- தற்பொழுது இந்தியாவில் 3 கோவிட் – 19 தடுப்பு மருந்துகள் சோதனையில் உள்ளன.
- கோவேக்சின், சைகோவ் டி மற்றும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத் தடுப்பு மருந்துகள் ஆகியவை அந்தத் தடுப்பு மருந்துகளாகும்.

## கற்பழிப்பு வழக்குகளுக்கான மரண தண்டனை குறித்த அவசரச் சட்டம்

- வங்க தேசத்தில் சமீபத்தில் நிகழ்ந்த பாலியல் வன்கொடுமைகளைத் தொடர்ந்து

ஏற்பட்ட நாடு தழுவிய போராட்டங்களைத் தொடர்ந்து அந்நாடானது அக்குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்குவதற்கான ஒரு அவசரச் சட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

- இது பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான அடக்குமுறை தடுப்புச் சட்டம் என்பதன் மீதான ஒரு அவசரச் சட்டமாகும்.
- தற்பொழுதிலிருந்து வன்புணர்விற்கான மிக அதிகபட்ச தண்டனை மரண தண்டனையாகும். இதற்கு முன்பு இதுவரையில் அதிகபட்ச தண்டனையாக கடுமையான ஆயுள் தண்டனை இருந்தது.

## ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தில் இடங்கள்

- சமீபத்தில் 47 உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையத்தில் (UNHRC - UN Human Rights Council) 15 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெற்றது.
- UNHRC-ன் இடங்களுக்கு பாகிஸ்தான், சீனா, ரஷ்யா, கியூபா ஆகிய நாடுகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.
- பாகிஸ்தான் தற்பொழுது 2018 ஆம் ஆண்டு ஜனவரி 01 முதல் UNHRC-ல் பணியாற்றி வருகின்றது.
- இந்த மறுதேர்தலின் மூலம், பாகிஸ்தான் நாடானது 2021 ஆம் ஆண்டு ஜனவரி 01 முதல் அடுத்து 3 ஆண்டுகளுக்கு அதன் உறுப்பினராகப் பணியாற்றும்.
- 2006 ஆம் ஆண்டு UNHRC ஏற்படுத்தப் பட்டதிலிருந்து அந்நிறுவனத்திற்கு பாகிஸ்தான் தேர்ந்தெடுக்கப்படுவது இது 5வது முறையாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## சிறப்புத் திருவிழாக் காலக் கடன் சலுகை

- மத்திய அரசானது தனது அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு ஒரே தவணையில் வழங்கப்படும் ரூ.10,000 என்ற ஒரு வட்டி இல்லாத திருவிழாக் கால முன்பணத்தை அறிவித்துள்ளது.
- இது பொருளாதாரத்தில் தேவையை அதிகப்படுத்துவதற்காக வேண்டி நுகர்வோர் செலவிடுதலை அதிகரிப்பதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்த முன்கூட்டிய தொகையான ரூ. 10,000 ஆனது முன்னரே செலுத்தப்பட்ட ஒரு ரூபே அட்டை வடிவில் இருக்கும். இதனை 2021 ஆம் ஆண்டு மார்ச 31 ஆம் தேதிக்குள் பயன்படுத்த வேண்டும்.
- இதனை விற்பனை முனையப் புள்ளியில் மட்டுமே பயன்படுத்த முடியும். இதனைக் கொண்டு ஏடிஎம்-களில் பணம் எடுக்க முடியாது.

## உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் 2020

- சர்வதேச நாணய நிதியமானது (IMF - International Monetary Fund) சமீபத்தில் உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் 2020 என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது "நீண்ட மற்றும் கடினமான ஒரு ஏற்றம்" என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இது ஒவ்வொரு ஆண்டும் ஜுன் மற்றும் செப்டம்பர் ஆகிய மாதங்களில் வெளியிடப் படுகின்றது.

*சிறப்பம்சங்கள்*

- இந்த அறிக்கையானது இந்தியாவின் பொருளாதாரம் 2020 ஆம் ஆண்டில் 10.3% ஆகக் குறையும் என்று கணித்துள்ளது.
- இந்த வளர்ச்சியானது பிரிக்ஸ் நாடுகளிடையே மிகக் குறைவானதாக இருக்கும்.
- 2020 ஆம் ஆண்டில் இந்தியாவின் தனிநபர் வருமான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (Gross Domestic Product - GDP) அடிப்படையில் வங்க தேசத்திற்கு அடுத்த நிலையில் சரிய இருக்கின்றது.
- வங்க தேசமானது டாலர் அடிப்படையில் தனிநபர் வருமான GDPயில் இந்தியாவை முந்த இருக்கின்றது. இது 2020 ஆம் ஆண்டில் 4% என்ற அளவில் $1,888 ஆக உயர இருக்கின்றது.
- இந்தியாவின் தனிநபர் வருமான GDP ஆனது 2020 ஆம் ஆண்டில் 10.5% என்ற அளவில் $1,877 ஆகக் குறைய இருக்கின்றது.
- பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கு அடுத்து குறைந்த தனி நபர் வருமான GDPயைப் பதிவு செய்து இந்தியாவானது தெற்கு ஆசியாவில் மூன்றாவது ஏழ்மையான நாடாக உள்ளது.
- வங்கதேசம், பூடான், மாலத்தீவுகள் மற்றும் இலங்கை ஆகிய இதர அனைத்து தெற்கு ஆசிய நாடுகளும் இந்தியாவை முந்தும் நிலையில் இருக்கும்.

# மாநிலச் செய்திகள்

## "எனது நகரம் எனது பெருமை" முன்னெடுப்பு

- ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநரான மனோஜ் சின்ஹா அவர்கள் "எனது நகரம் எனது பெருமை" என்ற ஒரு முன்னெடுப்பை அறிவித்துள்ளார்.
- இதன் முக்கியமான நோக்கம் நகரங்களில் பொது மக்கள் விழிப்புணர்வு, அடிமட்ட ஜனநாயகத்தை வலுப்படுத்துதல் மற்றும் அவரவர் வீடுகளுக்கே சென்று சேவை வழங்குதல் ஆகியவையாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## அமெரிக்காவில் வாழ்நாள் சாதனையாளர் விருது

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மனித நேயப் பற்றாளரான ஹரீஷ் கோடேசா அவர்களுக்கு சந்திரா நீஸ் வாழ்நாள் சாதனையாளர் விருது என்ற ஒரு விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- இது ஆதரவின்றி தவிக்கும் குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ததற்காக வேண்டி அமெரிக்காவில் அவருடைய பணியை அங்கீகரிக்கின்றது.
- சந்திரா நீஸ் வாழ்நாள் சாதனையாளர் விருதானது ஒவ்வொரு வருடமும் வழங்கப் படுகின்றது.
- இது அனைத்து குழந்தைகளும் பாதுகாப்பு, இருப்பிடம் மற்றும் எதிர்காலம் ஆகியவற்றைப் பெறுவதற்காக வேண்டி ஓய்வின்றிப் பணியாற்றுபவர்களைக் கௌரவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



# இதரச் செய்திகள்

## ஊழல் குறித்த டிரான்ஸ்பரென்சி சர்வதேச நிறுவனத்தின் அறிக்கை

- டிரான்ஸ்பரென்சி நிறுவனமானது "ஊழலை ஏற்றுமதி செய்தல் 2020 – ஓஇசிடியின் லஞ்ச எதிர்ப்புப் பிரகடனத்தின் அமலாக்கத்தை மதிப்பிடுதல்" என்ற ஒரு அறிக்கையை சமீபத்தில் வெயிட்டுள்ளது.
- இதில் ஆய்வு செய்யப்பட்ட சீனா, ஜப்பான், இந்தியா, தென் கொரியா, ஹாங்காங் மற்றும் சிங்கப்பூர் ஆகிய 6 ஆசிய நாடுகளும் 4 பிரிவுகளில் கீழ் நிலையில் வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- இந்த 6 நாடுகளும் அரசாங்கத்தின் அயல்நாட்டு அலுவலர்களின் லஞ்சத்திற்கு எதிரான எந்தவொரு அமலாக்கத்தையும் "சிறிதளவோ அல்லது முழுமையாகவோ" கொண்டிருக்க வில்லை.

- இது இந்தியா அதன் ஏற்றுமதியாளர்கள் மீது அயல்நாட்டு அலுவலர்களால் வாங்கப் படும் லஞ்சத்திற்கு எதிரான ஒரு நடவடிக்கையை போதிய அளவில் செயல்படுத்த வில்லை என்று கூறுகின்றது.
- அமெரிக்கா, ஐக்கிய இராஜ்ஜியம், சுவிட்சர்லாந்து மற்றும் இஸ்ரேல் ஆகிய 4 நாடுகள் மட்டுமே முன்னிலைப் பிரிவான "செயல்திறன்மிக்க அமலாக்கம்" என்ற பிரிவில் இடம் பிடித்துள்ளன.

**Enforcement against foreign bribery**

| Level | Selected countries/territories |
|---|---|
| Active | U.S., U.K., Switzerland, Israel |
| Moderate | Germany, France, Australia, Brazil, Sweden |
| Limited | Netherlands, Canada, South Africa, Chile, New Zealand |
| Little or no | China, Japan, South Korea, Hong Kong, India, Singapore, Belgium, Finland |

*47 economies scored based on number of investigations launched, other enforcement performance from 2016 to 2019*
*Source: Transparency International*

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★